(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.336/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.9 (LW.5)

| | | |
|---|---|---|
| Name | : | வரதராஜ் |
| Father's Name | : | பொன்னுசாமி |
| Village | : | குமரமங்கலம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 54 |

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார் )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.08.2026**

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது எலச்சிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.02.2025ம் தேதி காலை 7.45 மணிக்கு திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது திருச்செங்கோடு விசாகன் தனியார் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற RTA Intimation பேரில் அங்கு சென்று உள்நோயாளி சிகிச்சை பிரிவில் இருந்த இஸ்ரவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.59/2025, ச.பி.281, 125(a) BNS ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.03.2025ம் தேதி 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் ஸ்ரீனிவாசன் மற்றும் தாமரைக்கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் இஸ்ரவேல், சேகர், கிருஷ்ணன், கலாராணி, சீனிவாசன் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் நிலையம் ஆஜரான எதிரி நானிகவுண்டன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட வாகனமான TN 30N0792 என்ற பதிவெண்கொண்ட அரசு பேருந்தை வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நித்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். TN 30N0792 என்ற பதிவெண்கொண்ட அரசு பேருந்தின் மோட்டார் வாகன **ஆய்வறிக்கை அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட இஸ்ரவேல் என்பவருக்கு சிகிச்சை அளித்த திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனை மருத்துவர் ரத்தீஷ் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். அவைகள் முறையே விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மருத்துவர் வழங்கிய காயச்சான்றிழ் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 281,125(a) BNS லிருந்து பிரிவுகள் 281,125(b) BNS ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிரிமீது இதச பிரிவுகள் 281,125(b) BNS –ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.–**

வாதி கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்

**விசாரணை செய்யாமல் எதிரி மீது இறுயறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை.**

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.17 17:41:17 +0530